உ

சிவமயம்



இணுவிலைச் சேர்ந்த

அமரர்

# முருகேசு வைரவப்பிள்ளை

அவர்களின்

சிவப்பதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

**27.08.2002**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



இணுவிலைச் சேர்ந்த

அமரர்

# முருகேசு வைரவப்பிள்ளை

அவர்களின்

சிவப்பதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

## 27.08.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பிறப்பு
01.10.1925

இறப்பு
28.07.2002

அமரர்

# முருகேசு வைரவப்பிள்ளை

நீதி வெண்பா

சித்திரபானு ஆடிமாத அபரபக்க
அத்தினமாம் சதுர்த்தசியில் – உத்தமன்
வைரவப்பிள்ளை இருவில் குளத்தூரான்
ஏகினான் முத்தி இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் காப்பு

ஓங்கார வடிவான உன்பாத தாமரையும்
உபயபரிபுர மறைகளும்
உதிக்கின்ற செங்கதிர்க ளொருகோடி நிகரொளியும்
உத்தூள் நீற்றின் ஒளியும்
பாங்கார் கஜானனமும் உபயகரமும் வளர்பைபுயப்
பவளாச லங்கனான்கும்
பாசமுட னங்குசங் கொம்பேரி லட்டுகம்
பட்சமொடு வைத்தகர்மும்
நீங்காத அருண்மாரி பொழியந்தரி யம்பகமும்
நிறையுமும் மதமாரியும்
நீள்சடா டவியும் வெண்பிறையு மொரு தொந்தியும்
நெஞ்சிலொரு காலும் மறவேன்
காங்கேயன் மகிழ்தமைய னேகங்கை நதிபெருகு
காசிவாழ் துண்டிராச
கணபதியெனும் பெரிய குணமெரு வேயருட்
கருணாநிதிக் கடவுளே

## தேவாரம்

மாதர்ப் பிறைக்கன்னி யானை
மலையான் மகளோடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறியாதன கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மாற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள்புரி யாயே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வென்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
யளிவள ருள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காகத்
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனென் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
வன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக நெறி தந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்

## திருமந்திரம்

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பகமெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவனே

முத்தமிழ டைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரி செய்த அச்சிவ னுறைதரம்
மச்சது பொடி செய்த வதிததீர
வத்துயரது கொடி சுப்பிர மணிபடும்
மப்புன மதனிடை யிவமாகி
யக்குற மகளுடன் அச்சிறு முருகனை
யக்கென மணமருள் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

கல்வியும் கலைகளும் நற்பண்புகளும் சிறந்து விளங்கும் வலிகாமம் பகுதியைச் சேர்ந்த இணுவையம் பதியிலே வேளாளர் மரபில் தோன்றியவர்களான திரு.திருமதி முருகேசு நல்லம்மா தம்பதியினருக்கு மூத்த புதல்வனாக 01.10.1925 ஆம் ஆண்டு திரு.வைரவப்பிள்ளை பிறந்தார்.

திரு.வைரவப்பிள்ளை செய்த தவப்பயனாலும் பெற்றோர் செய்த தவப்பயனாலும் இவருக்கு இளைய சகோதரிகளாக மாணிக்கம், அரியமலர் என இரு பெண் சகோதரிகள் பிறந்தனர்.

குடும்பத்தில் மூத்த பிள்ளையும் அழகும் சுட்டித்தனமும் கொண்ட திரு.வைரவப்பிள்ளை பெற்றோருக்கும் சகோதரருக்கும் மட்டுமல்லாமல் உற்றார், உறவினருக்கும் மிகமிக விரும்பி அணைத்துக்கொள்ளும் செல்லப்பிள்ளையாக வளர்ந்துவந்தார்.

இவர் தனது கல்வியை இணுவில் சைவ மகாஜனாவில் கல்வி கற்றுவந்தார். பின் தன் குடும்பத் தொழிலான விவசாயத்தில் ஈடுபட்டுவந்தார். பின் தனது இரு சகோதரிகளில் ஒருவரான மாணிக்கத்தை கோண்டாவிலைச் சேர்ந்த வீரவாகு என்பவருக்கு திருமணம் முடித்துவைத்து சந்தோஷம் கொண்டார். இவர்களுக்கு விக்னேஸ்வரன் என ஒரேயொரு மகன் பிறந்தார்.

இளைய சகோதரியான அரியமலரை சண்டிலிப்பாயைச் சேர்ந்த கந்தசாமி என்பவருக்கு திருமணம்முடித்து வைத்தார். இவர்களது பிள்ளைகளான சூரியகலா வைரவப்பிள்ளையின் மகனான கனகசபாபதியை திருமணம் புரிந்தார். மற்றவர்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலானந்தன், விமலானந்தன், செல்வா (அமரர்), ஜெயந்தன் (லண்டன்), பவானி (இவர் இணுவிலைச் சேர்ந்தராஜராஜைச் திருமணம் புரிந்துள்ளார்), வேல்விழி (லண்டன்), சந்திரன், வசீகரன் என ஒன்பது பிள்ளைச் செல்வங்களைப் பெற்று மகிழ்தனர்.

வாலிப வயதை அடைந்த திரு.வைரப்பிள்ளைக்கு அவர்களது பெற்றோர் கொக்குவிலைச் சேர்ந்த செல்லையா - நாகம்மா என்பவர்களது இளைய மகளான ஞானரத்தினத்தை மணம்முடித்து வைத்தனர். மற்றைய மகளான பவளரத்தினம் கொக்குவிலைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை என்பவரை மணம் முடித்தார். இவர்களது பிள்ளைகள் மங்கையர்க்கரசி கொக்குவிலைச் சேர்ந்த அம்பலவாணியைச் திருமணம் புரிந்துள்ளார். தங்கரதினம் ஆனைகோட்டையைச் சேர்ந்த தணிகாசலத்தைத் திருமணம் புரிந்துகொண்டார். புனிதவதி (சுவிஸ்) கோண்டாவிலைச் சேர்ந்த தர்மலிங்கத்தை திருமணம் புரிந்தார். புவனேஸ்வரி ஆனைக் கோட்டையைச் சேர்ந்த நாகராசாவைத் திருமணம் புரிந்தார்.

திரு.வைரப்பிள்ளை - ஞானரத்தினம் இல்லறத்தில் இணைந்ததன் பயனாக இராஜேஸ்வரி, இரத்தினசபாபதி, கனகசபாபதி, சிவகுமாரன், இரத்தினேஸ்வரி, பரமேஸ்வரன் (அமரர்), பரமானந்தராசா, ஜெகதீஸ்வரி, ஆனந்தராசா, என ஆறு ஆண்களையும் மூன்று பெண் பிள்ளைகளையும் பெற்று அவர்களை உரியமுறையில் வளர்த்து கல்விபுகட்டி சிறப்புடன் வளர்த்து உரியவயதில் திருமணம் எனும் இல்லறத்தில் இணைத்து இன்பம் கண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவிலைச் சேர்ந்த மார்க்கண்டு - சிவகாமசுந்தரி என்பவர்களது மகனான ஆனந்தனுக்குத் திருமணம் முடித்துவைத்தனர். இவர்களுக்கு சுபேந்திரன், சுபிதன் என இரு ஆண் மக்கள் பிறந்தனர். அடுத்த மகனான இரத்தினசபாபதிக்கு கோண்டாவிலைச் சேர்ந்த சின்னத்துரை பரமேஸ்வரி தம்பதியினரின் மகளான இராஜேசினியை மணம்முடித்து வைத்தனர். இவர்களுக்கு றெபேக்கா, பரமேசன் என ஓர் பெண்ணும் ஓர் ஆணும் பிறந்தனர். அடுத்த மகனான கனகசபாபதிக்கு சண்டிலிப்பாயைச் சேர்ந்த கந்தசாமி - அரியமலர் தம்பதியினரின் மகள் சூரியகலாவைத் திருமணம்முடித்துவைத்தனர். இவர்களுக்கு கௌசிகா, கீர்த்திகா, அபினயா என மூன்று பெண் பிள்ளைகள் பிறந்தனர். அடுத்த மகன் சிவகுமாரனை இணுவில் கிழக்கைச் சேர்ந்த நடராசா - இரத்தினம் தம்பதியினரின் மகளான பாமினியை மணம்முடித்து வைத்தனர். இவர்களுக்கு சோபிதா, சுகன்யா, சுசந்திகா, சுதர்மிகா,சுவைதிகா, என ஐந்து பெண் பிள்ளைகள் பிறந்தனர். அடுத்த மகள் இரத்தினேஸ்வரியை கோண்டாவிலைச் சேர்ந்த கனகலிங்கம் - சின்னமணி தம்பதியினரின் மகனான பாலசுப்பிரமணியத்தை மணம்முடித்துவைத்தனர். இவர்களுக்கு பானுகா, பானுஜன் என ஓர் ஆணும் ஓர் பெண்ணும் பிறந்தனர். அடுத்தமகன் பரமானந்தராசாவை இணுவில் மேற்கைச் சேர்ந்த முருகையா - கணேஸ்வரி தம்பதியினரின் மகளான உதயவேணியை மணம்முடித்து வைத்தனர். அடுத்த மகளான ஜெகதீஸ்வரியை இணுவிலைச் சேர்ந்த ஸ்ரீசண்முகராசவுக்கு மணம்முடித்து வைத்தனர். இவர்களுக்கு சுபேக்கா, நிரோஷன், நிலக்ஷன், நிதர்சன், விதுஷன் என ஓர் பெண்ணும் நான்கு ஆண் மக்களும் பிறந்தனர். அடுத்த மகன் ஆனந்தராசாவை இணுவிலைச் சேர்ந்த செல்வராசா - கௌசல்யா தம்பதியினரின் மூத்த மகளான நிரஞ்சனாவுக்குத் திருமணம் முடித்துவைத்தனர். இவர்களுக்கு அர்ச்சுவினியா என ஓர் பெண் பிள்ளை பிறந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது மூத்த மகளான இராஜேஸ்வரியை திரு. வைரவப்பிள்ளை மருமகன்கள், மருமகள்மார், பேரப்பிள்ளைகள் என எல்லாச் சிறப்புக்களைக் கண்டு கழித்து 28.07.2002 அன்று எம்பெருமான் திருவடி சேர்ந்தார். அன்னாரது ஆத்மா சாத்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தந்தையே!

பள்ளிக்குச் சென்று வரும்
பாலகராய் நாமிருந்த
முன்னை நெடுநாளிலிருந்து
மூழுதையா உம் நினைவு .....
"பட்டு" என்றும் அன்பாய்ப்
பழகும் "பெரியதம்பி"
"மணி" என்றினிய ... "வவா"
"இராசாத்தி" "இராசன்" என்னும்
பிள்ளைகளின் "ஆனந்த"ப்
பொழுதுகளில் நீர் கலந்த
ஞாபகங்களே எந்த
நாளும் தொடுதையா!
"தோட்டம்", "சுருட்டு" என்று
தொடரும் உழைப்பிலிருந்து ......
நாமின்று அலறும் இற்றை
நாள்வரை உம் கேளுங்கள்
நாளும் நினைவகலா
ஞாபகமாய் தோன்றுதையா!
வீட்டருகு "வைரவரை"
விளங்கும் "கருணாகரரை"
ஆச்சி எனும் "அம்மாள்"
ஆலயங்களோடும் உங்கள்
"நேர்த்தி" "விரதம்" என்னும்
ஞாபகங்களே.... தொடர
"காவடிகளாய்" மனதும்
கனத்துச் சுழருதையா!
"ஞானம்" எனும் துணையை
நடுவிற் பிரிந்து "அப்பு"
சோகமுறச் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரம் சுமந்து - இன்று
நீரும் பிரிந்தீர் - உங்கள்
நினைவுகள் எம்மோடு என்றும்......!

தெய்வத் திருப் பாதம்
தினமும் தொழுதிருந்து
ஐயா! உம் வழி தொடர்வோம்
அமைதி! ஆத்ம சாந்தி கொள்வீர்!

- பிள்ளைகள் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் துணை

# கந்தர் ஷஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நி'டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
ச'டி கவசம் தனை

## குறள் வெண்பா

**அமரர் இடர்தீர் அமரம் புரிந்த**
**குமரன் அடிநெஞ்சே குறி**

**நிலைமண்டில ஆசிரியப்பா**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக.
சரவண பவனார் சடுதியில் வருக.
ரவண பவச ரரரர ரரர
ரவண பவச ரிரிரிரி ரிரிரி
வணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நவமணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரி முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள்நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புகழ்க்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுத் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட வி'ங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய வி'ங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
என்னைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாராத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்துஎனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்துஅமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத்து ஆட்கொள்ள எந்தன் உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

(முற்றும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதங்களின் பெயர் வந்த கதை

| | | |
|---|---|---|
| ஜனவரி | - | சொர்க்கத்தில் வாயிற் காப்போனாகிய (Janus) என்பவரின் பெயரில் அழைக்கப்படுகின்றது. |
| பெப்பிரவரி | - | பாவங்களுக்கு பக்காரம் தேடும் காலத்தை பெப் ருவாலியா என்பவர் அப் பெயரால் வழங்கப்படு கின்றது. |
| மார்ச் | - | யுத்த தேவதையான மார்ஸ் என்பவரின் பெயரால் அழைக்கப்படுகின்றது. |
| ஏப்பிரல் | - | ஏற்பிறிரே என்ற லத்தின் வார்த்தை அதன் அர்த் தம் மலர்வு, அரும்புதல். |
| மே | - | தாவரங்களை வளரவைக்கும் தேவதையான மேய்யா (Maia)வின் பெயரால் அழைக்கப்படுகிறது. |
| ஜூன் | - | ஜுவனிஸ் |
| ஜூலை | - | யூலியர் சீஸரின் பெயரால் அழைக்கப்படுகிறது. |
| ஆகஸ்ட் | - | முதலாவது ரோமானியச் சக்கரவர்த்தி ஆகஸ் தஸ்சின் பெயரால் அழைக்கப்படுகின்றது. |
| செப்டெம்பர் | - | லத்தின் வார்த்தையான செப்ரம் அதன் அர்த்தல் ஏழு. |
| ஒக்டோபர் | - | லத்தின் வார்த்தையான ஒக்டோ அதன் அர்த்தம் (எட்டு) |
| நவம்பர் | - | லத்தின் வார்த்தையான நவம் அதன் அர்த்தம் ஒன்பது |
| டிசம்பர் | - | லத்தின் வார்த்தையான டிசம் அதன் அரத்தம் பத்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

முருகேசு + நல்லம்மா
- வைரவப்பிள்ளை
- மாணிக்கம்
- அரியமலர்

செல்லையா + நாகம்மா
- பவளரத்தினம்
- ஞானரத்தினம்

(மாணிக்கம் + ஞானரத்தினம்)

- இராஜேஸ்வரி + ஆனந்தன் → சுபேந்திரன், சுபிதன்
- இரத்தினசபாபதி + இராஜேசினி → றெபேக்கா, பரமேசன்
- கனகசபாபதி + சூரியகலா → கௌசிகா, கீர்த்திகா, அபிநயா
- சிவகுமாரன் + பாமினி → சோபிதா, சுகன்யா, சுசந்திகா, சுதர்மிகா, சுவைதிகா
- இரத்தினேஸ்வரி + பாலசுப்பிரமணியம் → பானுகா, பானுஜன்
- பரமேஸ்வரன் (அமரர்)
- பரமானந்தராசா + உதயவேணி
- ஜெகதீஸ்வரி + ஸ்ரீசண்முகராஜா → சுபேக்கா, நிரோஷன், நிலக்ஷன், நிதர்ஷன், விதுசன்
- ஆனந்தராசா + நிரஞ்சனா → அர்ச்சுவினியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்.

எமது அன்புத் தந்தையார் இயற்கையெய்திய வேளையில் உடன் வந்து எமது துக்கத்தில் பங்குகொண்டு, பல வழிகளிலும் உதவி புரிந்து ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள், தந்தி தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், உரிய நேரத்தில் இம்மலரை அச்சிட்டுத் தந்த **கியோகாஸ்** நிறுவனத்தினருக்கும், இன்று நிகழும் வைபவத்தில் மதிய போசனத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**வணக்கம்**

**இணுவில், கிழக்கு**
**இணுவில்.**



**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**

**Printed By:**
**Kyogars Printers, K.K.S Road, Inuvil. Tel: 021 - 3573**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org